**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.121/2024**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாட்டுத்துரை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்துக்கவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பெருமாள்கவுண்டன்வலசு | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

வாதி எனக்கு என்ன உறவு என்றால் ? மூத்த சகோதரி. எனது தகப்பனார் நாச்சிமுத்துகவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றால் ? சரிதான். முதல் மனைவியின் பெயர் கருப்பாத்தாள். நாச்சிமுத்துகவுண்டர், கருப்பாத்தாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ? வாதி காளியாத்தாள் மட்டுமே ஒரே மகள். ஆண் வாரிசு இல்லாத காரணத்தினால் எனது பெரியம்மா உயிருடன் இருக்கும் போதே எனது தகப்பனார் எனது தாயாரை 2வதாக திருமணம் செய்து கொண்டார். எனது தாயார் பெயர் லட்சுமி. எனது தனப்பனாருக்கும் லட்சுமிக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் ? எனது மூத்த சகோதரி சௌந்தரம் மற்றும் இவ்வழக்கு பிரதிவாதியாகிய நான் மட்டுமே வாரிசு. வாதி இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? எனது சகோதரிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தேன். செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தினை வேறு யாருக்கும் கொடுக்க கூடாது என்றும், காளியாத்தாள் காலத்திற்கு பிறகு மேற்படி சொத்தானது எனக்கோ, எனது வாரிசுகளுக்கோ வரவேண்டும் என்ற நிபந்தனையோடு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தேன். வேறு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? செட்டில்மெண்ட்

பத்திரத்தை பொறுத்து எழுதிய பிழைதிருத்தல் ஆவணத்தை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை செய்ய கோரி பரிகாரம் கோரியுள்ளார். தாவா சொத்தை எனது சகோதரி அனுபவித்து வருவதை எவ்வித இடையூறும் நான் செய்யக்க்கூடாது என்றும், சொத்து எனது சகோதரிக்கு பாத்தியப்பட்ட தனி சொத்து என்று விளம்புகை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சர்வே எண்.433/2B. அதற்கு நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் ? வடக்கு, கிழக்கு – துரைச்சாமி நிலமும், தெற்கு – லட்சுமிசாமி வகையறா நிலம், மேற்கு – அண்ணாத்துரை வகையறா நிலம்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.01 18:39:53 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்